# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (19.12.2015 முதல் 23.12.2015)

**அறிக்கை எண் 101-2015** **தேதி: 18.12.2015**

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 29°செ முதல் 32°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 21°செ முதல் 25°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 16°செ முதல் 21°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 7°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் பல இடங்களில் இலேசானது முதல் மிதமான மழை பெறப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (19.12.2015 முதல் 23.12.2015)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 29°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 20°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 72 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 19.12.15 | 0 | 29 | 20 | 5 | 90 | 72 | 10 | வடகிழக்கு |
| 20.12.15 | 0 | 29 | 20 | 5 | 90 | 72 | 10 | வடகிழக்கு |
| 21.12.15 | 0 | 29 | 20 | 5 | 90 | 72 | 10 | வடகிழக்கு |
| 22.12.15 | 0 | 29 | 20 | 5 | 90 | 72 | 10 | வடகிழக்கு |
| 23.12.15 | 0 | 29 | 20 | 5 | 90 | 72 | 10 | வடகிழக்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ தற்போது நிலவும் குறைந்த வெப்பநிலை மற்றும் அதிக காற்றின் ஈரப்பத்தால் திராட்சையில் அடிச்சாம்பல் நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. இதைக்கட்டுப்படுத்த 1 சதவீதம் போர்டாக்ஸ் கலவை (Bordeaux mixture) அல்லது ஏதாவது ஒரு காப்பர் பூஞ்சாணக் கொல்லியை (copper fungicide) 0.25 சதவீதம் என்ற அளவில் தெளிக்கவும். இதனை ஒரு வார இடைவெளியில் மறு முறையும் தெளிக்கவும்.
- ✓ நிலவும் வறண்ட வானிலையை பயன்படுத்தி முன்பருவத்தில் அறுவடை செய்த சம்பா நெல் தானியங்களை காலை 10 மணி மற்றும் மாலை 3 மணி ஆகிய நேரங்களில் சூரிய வெளிச்சத்தில் உலர வைக்கவும்.
- ✓ காலை மற்றும் மாலை நேரங்களில் நிலவும் குறைந்த வெப்பநிலை மற்றும் அதிக காற்றின் ஈரப்பத்தால் மக்காச்சோளத்தில் அடிச்சாம்பல் நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. இதைக்கட்டுப்படுத்த ஒரு எக்டருக்கு 1000 கிராம் என்ற அளவில் மெட்டலாக்சைல் மற்றும் மேங்கோசெப் (metel axyl + mancozeb) மருந்தினை கலந்து தெளிக்கவும்.
- ✓ கால்நடை மற்றும் கோழிகளுக்கு சுத்தமான குடிநீரை வழங்க வேண்டும். மேலும் கால்நடைகள் புதிதாக முளைத்த களை மற்றும் புற்களை மேயவிடாமல் பாதுகாக்கவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ நிலவும் வறண்ட வானிலையை பயன்படுத்தி முன்பருவத்தில் அறுவடை செய்த சம்பா நெல் தானியங்களை காலை 10 மணி மற்றும் மாலை 3 மணி ஆகிய நேரங்களில் சூரிய வெளிச்சத்தில் உலர வைக்கவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்
த.நா.வே.ப.கழகம், கோவை.